# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, UDHAGAMANDALAM

(Chapter XXIII Code of Criminal Procedure)

## C.C. No.113/2024

| | | |
|---|---|---|
| DEPOSTION OF WITNESS | : | **அ.சா.4** |
| NAME | : | மணி |
| FATHER | : | ஜோகிகவுடர் |
| TALUK | : | மந்தனை |
| DISTRICT | : | நீலகிரி |
| AGE | : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**DATED: 25.04.2025 (சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.)**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் 2012-ம் வருடம் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பொது மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். மேற்படி வங்கியில் நான் 1972-ம் வருடம் உதவியாளராக பணியில் சேர்ந்தேன். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட காலகட்டமான 1992 முதல் 2000 வரை நான் அதே வங்கியில் உதவியாளராக தான் பணிபுரிந்து வந்தேன். நான் 2010-ல் மேற்படி வங்கியில் உதவி பொது மேலாளராக பணிபுரிந்தபோது மேற்படி வங்கியின் மஞ்சூர் கிளையில் முறைகேடுகள் நடந்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். மேற்படி வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு, நடப்பு கணக்கு மற்றும் வைப்பீடு கணக்கு வைத்துக் கொள்ளும் வசதி இருந்தது. மேற்படி வங்கியின் கணக்குகளை தணிக்கையாளர் தணிக்கை செய்து வங்கிக்கு நஷ்டம் ஏற்பட்டதாக அறிக்கை அளித்துள்ளார். ஒவ்வொரு வருடமும் எவ்வளவு நஷ்டம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். 1991-ல் ரூ18.64 லட்சமும், 1992-ல் ரூ6.25 லட்சமும், 1993-ல் ரூ2.91 லட்சமும், 1994-ல் ரூ3.58 லட்சமும், 1995-ல் ரூ6.08 லட்சமும் நஷ்டம் ஏற்பட்டதாகவும், 1996-ல் நஷ்டம் இல்லை எனவும், 1997-ல் ரூ115.26 லட்சமும், 1998-ல் ரூ512.16 லட்சமும்,

1999-ல் ரூ7.14 லட்சமும், 2000-ல் ரூ395.24 லட்சமும் நஷ்டம் ஏற்பட்டதாக அந்த தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. போலீசார் விசாரிக்கும்போது மேற்படி விவரங்களை நான் கூறினேன். மேற்படி தணிக்கை ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும். **அரசுதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியமாகக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

| | | |
|---|---|---|
| **கேள்வி** | : | நான் என் போலீஸ் விசாரணையில் மேற்படி கூட்டுறவு வங்கி மஞ்சூர் கிளையில் மினி டெபாசிட் இருந்துள்ளது என்று கூறியுள்ளேன் என்றால்? |
| **பதில்** | : | சரி தான். |
| **கேள்வி** | : | மேற்படி கிளையில் வங்கி கணக்குகளை ஆண்டு ஒருமுறை அல்லது இரண்டு முறை ஆய்வு செய்வதற்கு ஒருவர் நியமிக்கப்படுவதாக நான் என் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால்? |
| **பதில்** | : | சரி தான். |
| **கேள்வி** | : | மேற்படி ஆய்வு முடிவில் கடன் வழங்க கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், வட்டி வசூல் ஆகியவை சம்மந்தமாக மட்டும் ஆய்வு அறிக்கை வழங்கப்படும் என்று நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால்? |
| **பதில்** | : | சரி தான். |
| **கேள்வி** | : | அதேபோல் மஞ்சூர் கிளையில் இறந்து போன மினி டெபாசிட் ஏஜென்ட் பி.லட்சுமணன் என்பவரை RC.8307/89. A1 நாள் 06.07.1989-ன் படி தனி அலுவலர் P.M,நடராஜன் என்பவரால் 3% கமிஷன் அடிப்படையில் நியமித்தும் 10.07.1989 முதல் மினி டெபாசிட் ஏஜென்டாக பி.லட்சுமணன் நியமிக்கப்பட்டதாக நான் என் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால்? |
| **பதில்** | : | சரி தான். |
| **கேள்வி** | : | அதே போல் மேற்படி மினி டெபாசிட் ஏஜென்ட் பி,லட்சுமணன் என்பவரிடமிருந்து 11.07.1989 தேதியில் ரூ.1000/- காப்பு வைப்பீடு தொகையாக பெறப்பட்டது என்றும், அதேபோல் 09.02.1990 |

| | | |
|---|---|---|
| | | மறுபடியும் ரூ.1000/- காப்பு வைப்பீடு தொகையாக பெறப்பட்டது என்றும் கூறியுள்ளேனா என்றால்? |
| **பதில்** | : | சரி தான். |
| **கேள்வி** | : | மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக கூறாமல் விட்டுவிட்டேன் என்றால்? |
| **பதில்** | : | சரியல்ல. |

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

| | | |
|---|---|---|
| **கேள்வி** | : | நான் என் முதல் விசாரணையில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு நஷ்டம் ஏற்பட்டதாக கூறுகிறேன். அந்த நஷ்டமானது எந்த எதிரியின் பணி காலத்தில் எவ்வாறு யாரால் ஏற்பட்டது என்றால்? |
| **பதில்** | : | எனக்கு தெரியாது. |
| **கேள்வி** | : | மினி டெபாசிட் ஏஜென்டான பி.லட்சுமணன் மேற்படி வங்கி கிளையில் அனைத்து ஆவணங்களை கையாளும் பணியும் செய்து வந்தார் என்று சொன்னால்? |
| **பதில்** | : | எனக்கு தெரியாது. |
| **கேள்வி** | : | இந்த வழக்கின் எதிரிகள் அனைவரும் அப்பாவிகள் என்றாலும், மினி ஏஜென்ட் பி.லட்சுமணன் என்பவரால் தான் மேற்படி வங்கிக்கு நான் கூறிய நஷ்டம் ஏற்பட்டது என்றால்? |
| **பதில்** | : | எனக்கு தெரியாது. |

**குறுக்கு விசாரணை முடிவுற்றது:**

E SASIKALA

Digitally signed by E SASIKALA
Date: 2025.04.25 16:23:56 +0530